30th November 1970]

*Temple Servants*

*28. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the salaries at present paid to temple servants under various categories of service ; and

(*b*) whether there is any proposal to increase the same ?

**கோயில் பணியாளர்கள்**

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பல்வேறு வகைப் பணிகளின் கீழ் கோயில் பணியாளர்களுக்குத் தற்போது வழங்கப்படும் சம்பளம் எவ்வளவு ?

(இ) அதை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) கோயில் ஊழியர்களின் சம்பள வீதங்கள் கோயில்களின் வருவாயைப் பொறுத்திருப்பதால், ஒரே விதமான சம்பள வீதங்கள் செடலிலில்லை. கோயில் ஊழியர்களுக்குரிய சம்பள வீதங்கள் முதலியன கோயில் அதிகாரிகளால் முடிவு செய்யப்படுகின்றன. பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒரு சில பெரிய கோயில்கள், பட்டியலில் சேர்க்கட்படாத சிறிய கோயில்கள் இவற்றில் அளிக்கப்படும் சம்பளம் பற்றிய பட்டியல்† ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) கோயில் ஊழியர்கள் அரசுப் பணியாளர்கள் அல்ல. எனவே அரசு அவர்களது சம்பளம் பற்றி எதுவும் முடிவு செய்வதற்கில்லை. எனவே இவ்வினாவிற்கு இடமில்லை.

*Veterinary Dispensary*

*29. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that a veterinary dispensary is functioning inside the Angalamman Temple in Belur, Salem District;

(*b*) if so, the reason therefor ; and

(*c*) whether there is any proposal to shift the same from that place ?

---

† Printed as Appendix II

[30th November 1970

## கால்நடை மருத்துவமனை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம் மாவட்டம், பேளூரில் உள்ள அங்காளம்மன் கோவிலினுள், கால்நடை மருத்துவமனை செயல்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) அந்த இடத்திலிருந்து அதை இடம் மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை. கால்நடை வளர்ப்புத் துறையின் துணை நிலையம் ஒன்றுதான் அங்கு செயல்பட்டு வந்தது.

(இ) யும் (உ) வும் : அக்கிளை நிலையத்தை கோயில் கட்டடததினின்று காலி செய்து வேறு தகுந்த இடத்திற்கு மாற்றும்படி அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி, அந்நிலையம் தற்போது, பேலூர் அஞ்சல் நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் கட்டிடம் ஒன்றில் மாற்றப்பட்டு செயல்பட்டுவருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : எவ்வளவு காலமாக அந்தக் கிளை நிலையம் கோயிலுக்குள் நடந்து வந்தது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 1966-ஆம் ஆண்டிலிருந்து அந்த நிலையம் அங்கே செயல்பட்டு வந்தது. அதன் பிறகு கால்நடை ஆஸ்பத்திரியில் என்று போட்டிருக்கிறது. கால்நடை ஆஸ்பத்திரி அங்கே எப்போதிருந்து இருந்தது என்றில்லை. சப்-செண்டரில்—கீ வில்லேஜ் சப் செண்டரில்—1966-ல் இருந்து இருந்தது. அதற்குப் பிறகு கால்நடை இலாக்கா ''ரீயார்கனைஸ்'' செய்யப்பட்ட பிறகு, இந்த சப் செண்டரில்தான் இயங்கி வந்தது. இப்போது இது சர்க்காரின் கவனத்திற்கு வந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது போன்ற விலங்கு மருத்துவமனை ஒன்று தஞ்சை பெரிய கோயிலான பிருகதீஸ்வரர் கோயிலுக்குள் நடைபெற்றுவருவது அரசுக்குத்தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அரசுக்குத் தெரியாது. அப்படியிருந்தால், அதுபற்றி விசாரிக்கலாம்.

## *Rubber Plantations*

*30. Q.—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the expenditure incurred by the Tamil Nadu Government to grow Rubber Plantations during the financial year 1969-70 ; and

(*b*) the income derived by the Tamil Nadu Government through Rubber Plantations during the financial year 1969-70 ?